# மாரியம்மன்

## உற்பத்தி




சரஸ்வதி புத்தகசாலை
175. செட்டியார் தெருவு
கொழும்பு.

உ

தேவி துணை

சகல சமயத்தாருக்கும் பொதுவான

# மாரியம்மன் உற்பத்தி.

மாரியம்மன் காவியமும், குளுத்தியும் சகல விஷசன்னி
முதலியவைகளுக்கு குளி அடியும் அடங்கியது.



## விநாயகர் துதி.

உலகத்துக் காதியாய் தேவருக்காதியாய் உலாவச்
சுகத்துக் காதியாய் சுரர்களுக் கிசராய் சுடரும்
மகத்துக் கிசராய் கணங்களுக் கிசராய் மதிப்போர்
அகத்துக் கூடியகணேச னின்னடி யிணைத்தொழுதாம்

## சுப்பிரமணியர் துதி.

ஓராறு சென்னி ஒருமுருகா வென்பதற்குத்
தீராதவல்பிணிநோய் தீருமே போராட
கொக்கரித் துடற்கறுத்து கொக்காக்க ரரைத்துணித்த
விக்கிர்மத திருக்கரத்து வேல்.

# முகவுரை

இந்நூல் உலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு வினைப் பகுதியினால் நினையாப்பிரகாரமாக உண்டாகும் அவஸ்தை யாகிய சுரம், கண்ணோய், வைசூரி யென்னும் தொற்று நோய், கண்ணூறு, நாத்திஸ்ட்டி, சின்னம்மை பெரியம்மை முதலிய நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதி களும், மாட்டு, ஆட்டுப்பட்டிகளில் உண்டாகும், கூப்பிடு வானென்னும் கோதாரிநோய் முதலியவைகளும், நம்மீது சத்துருக்கள் நெருங்கிய போதும், இந்த "மாரியம்மன் காவியம்" "குளுந்தி" இவைகளை மிகுந்தபத்தியுடன் தூப மிட்டு பரிசுத்தமான இடத்தில் வைத்துப் பாராயணம் பண்ண நிவர்த்தியாவதுமன்றி, தனிவழிகளில் போகும் போது பாராயணம் பண்ணிக்கொண்டு போனால் துஷ்டப் பிசாசு, துஷ்டமிருகம்; விஷசெந்துக்கள் விலகிவிடும், நம் பிக்கையுடன் பாராயணம் செய்து பயனடைவர்களாக! சுபம்!! சாந்தி!!!

# மாரியம்மன் உற்பத்தி

## அகவல்

ஓம் பூவினியமாதே கேளாய் உன்பொன்னடி காணவந்தேன்
மேவிய மாரியம்மா திருவுளம் பொருந் தொண்ணுதோ
ஆதியாய் அரன்முடிவாய் அண்டபகிரண்டமாய் ஐம்பத்தோரட்சரமாய்
சோதியாய் வெட்ட வெளியாச் சொரூபமாய் நின்றவளே,
ஊத்துக்காடமர்ந்தவளே, உதிரபெலி கொண்டவளே
பலவேஷம் கொண்டவளே பரசுராமனைப் பெற்றவளே
சத்திநாற்றிருபதும் சமயம்பதினாறும் மிச்சமாய் மேலாயிருந்தவளே
கெந்தம், பர்வதம் சடாமுனியும் மானொருகையும் மழுவொருகையும்
சங்கொருகையும் சக்ரமொருகையும் பச்சைத்திருவில்லும்
பறந்தோர் வேப்பிலையும்
இச்சையுடன் சென்றேகவரம் பெற்றவளே ஆதிபராபரியே,
அரனுடைய தங்கையம்மா நாதமறவோங்காரி நற்பொருளால்நின்ற
தக்கன் மகளாய்த் தானுதித்த வீரசக்தி பின்னும் [சக்தி
மலையரசன் பிள்ளையெனவே யுதித்தாய் அன்னநடைமாதுமை
யுமகிருந்தானெங்களம்மை கும்பத்துமாரி யென்றும் கோவிந்தன்
யென்றும் ஏழுபேர்கன்னியென்றும் ஏகபராசத்தியென்றும் [தங்கை
வார்ச்சி சடைச்சியென்றும் வல்லபத்ர காளியென்றும்
ஆழிமால் தங்கையென்றும் ஆச்சிமீனாட்சியென்றும்
துர்க்கைஅபிராமியென்றும் சொல்லரிய பேச்சியென்றும்கண்ணிலே
வந்துதித்த கண்ணகைத்தாய் யம்மையென்றும்
பரமன் திருவருளால்பாருலகிலேபிறந்தாய் அதிகதவமாகவம்மையுமை
வீற்றிருந்தாள் விற்றிருந்தாளெங்களம்மன் வெகுநாள்தவமாகஎன்ன
வரம் வேணுமெனக் கேட்டாரே ஈஸ்வரனார்
பாராமல்வந்தெனக்குப் பதினெட்டுமுத்துவகை தாராயென்க்கேட்டாள்
தார்குழலும்மப்போது அப்போ பரமேஸ்பரன் அன்பாய் மனதிறங்கி
கடுகுதிரி நெல்லுதிரி பனையேறி பொக்கிளிப்பான்
இந்த நல்ல முத்துவகை ஈஸ்வரிக்குத்தான் கொடுத்தார்
கொடுத்த நல்ல முத்துகளைக் குறையாமலே வாங்கி
இந்தநல்ல முத்தரிமை யானறியவேணுமென்று
ஈஸ்பரனார் மேனியிலே கனகமுத்தை தாநெறித்தார்
நெருப்புத்தணலாக நின்றெரிய முத்துவகை
அப்போபரமசிவன் அதுபொறுக்கமாட்டாமல்
பத்தினியே நீயெனக்குப் பாரமுத்தை ஏனெறித்தாய்

நீயே யெறிந்த முத்துக்களை நீ இறக்கிவிடு பத்தினியே
வயதுசிறு பாலகர்க்கும் வயோதிபத்தோர் தங்களுக்கும்
இந்தநல்ல முத்துகளைப்போடாதே பத்தினியே
வம்புகளுரைத்தோர்க்கும் வாழ்வினைக் கொடுத்தோர்க்கும்
துன்பங்கள் செய்தோர்க்கும்
தொடர்ந்து நஞ்சி யிட்டோர்க்கும் கற்புகளித்தோர்க்கும்
காமிநெஞ்சோர் தங்களுக்கும் இந்த நல்ல முத்துக்களை
போய் எறியும் தாயாரே என்று வாக்குமேதான் கொடுத்தார்
வரமுடைய அம்மனுக்கு

முற்றிற்று.

## மாரியம்மன் காவியம்

### விநாயகர் துதி.

அறிவு மிறியு கிலியு மானசிவசோதி
ஆதியுடனே நடனமாடு மகமாரி
கரியமால் தங்கையென வந்தமகமாரி
காரணிபதம் பணிந்தே தமிழ் வழுத்த
உரிய தொருகரி முகமுமணையகுடவயிறும்
ஓதரிய நல்வாயுமான மும்மதமும்
பெரிய தொரு வெண்மரு பழகுமுயர்
விகடதட பங்கயத் தும்பி முகனைப் பணிகுவோமே

### நூல்.

அகில முழுதும் கிருபையான் திரிசூலி
ஆதியுடனே நடன மாடு மகமாரி
கரியலர் சவுந்தரி சடாதரி மாதங்கி
சாயுட்சிய தேவி உன் தாளிணை வழுத்த
வரைதங்கு மாதுமையும் மாலுமரனும்
வள்ளிமணவாளன் மாதுலட்சுமியும்
ககனமுயர் கன்னனூர் கண்ணகியும் மனதிலுறை
காரணியு மெப்பொழுதுமே உதவிசெய்வார்
ஆதி அபிராமி கௌமாரி திரிச்சூலி
அரலோக பரலோக ஆனந்தரூபி
சோதி மாதவி மாகாளி ரணசூலி
தோடவிள் நற்கருட நாடுபரதேவி

வேதனைகள் நோய் பிணிகள் தீரவருமாரி
மேவரிய பேச்சியென தாயனைய சக்தி
பாதகமலர் துணையதாக அருள் நல்குவாய்
பாரிலுயர் வீரபத்ர காளி என் தாயே

இந்துமுடி வேணி அரனோடு நடமாடும்
ஈசுபரி ஏகபரை சோதிநவகாளி
விந்தை மகிடாசூரன் தன்னுயிர் வதைத்த
வேதாந்த ரூபி வினைதீர வருமாதே

என்தனக் குற்றவினை மக்களுக்கன் பாக்
ஏகமுறு கோதாரி வாராம லென்றும்
சந்தோஷ மாகவே நற்கிருபை தருவாய்
தாயான நவகோடி சக்தி என் தாயே

ஈராறு நற்கரத்தவளே அருள்பவளே
ஏகமுறு மீசருடன் னென்று முறைபவளே
தீராதநோய்பிணிகள் தீர்க்கு மென்தாயே
சேரிதனையே நிதங்காக்கு மென்தாயே

நாராயனன் தங்கை யானவளும் நீயே
நாலுமறை ஆகம புராணம் நீதாயே
ஆராமை நோய்பிணிகள் தீர வருளம்மா
ஆதியே சிவமுத்து மாரி என்தாயே

உம்பர்தொழு மம்பிகை எனும்சக்தி நீயே
ஓதரிவடவை தவ சுற்றவளும் நீயே
நம்பியே காத்தானை ஈன்றவளும் நீயே
நாதஓங்கார மறையானவளும் நீயே

தும்பி முகனைத்தந்த சோதிபரை நீயே
சூட்சாதி சூட்சமுறு சுந்தரியும் நீயே
அம்புவியிலென்று மெமை ஆள்பவளும் நீயே
ஆதியே சிவமுத்து மாரி. என்தாயே

ஊளிவினை கோதாரி தீர வருளம்மா
உத்தண்ட தண்டி கெம்பீரி நீ அம்மா
நாளுமுன் மக்கள்மனை காக்கநினை அம்மா
நாரி கௌமாரி திரிசூலி நீ அம்மா

ஏளுலகு ஆற்ற உயிருக் குயிர் நீ அம்மா
எங்கு மறவேவளத் தாளு நீ அம்மா
சூளுவருபரிகலத் தோகை நீ அம்மா
சோதியே சிவமுத்துமாரி என்தாயே

எட்டெழுத் தட்சர மதானவளும் நீயே
ஏகமுறு மஞ்செழுங் துற்னமு நீயே
திட்டமுறு நவகோண சத்திபரை நீயே
திருமேவும் ஐம்பத் தோட்சரமு நீயே

நட்டணைய தான்நவசத்தி பரை நீயே
நாற்பத்து முக்கோண நாயகியும் நீயே
இட்டமுறு கோதாரி தீர்ப்பவளும் நீயே
ஏகமுறு சிவமுத்து மாரி என்தாயே

ஏகமா மீசரிடமென்று முறைபவளே
ஈசருக்கேழுத் தெறிந்தவளும் நீயே
நாகமணி நோய்த்துயர் தணித்தவளு நீயே
நாற்பிரப் பங்கோல் பிடித்தவளும் நீயே

பாகமுறு பதினுறு கோணபரை நீயே
பகருடுக் கொடுகரக பத்தினியும் நீயே
அகமுறு வேப்பநகர் காத்தவளும் நீயே
ஆதியே சிவமுத்து மாரி என்தாயே

ஐயமகள் வேப்பநகராதி சிவசக்தி
ஆனந்தமாய் நடனமாடு மகமாரி
ஒய்யதொரு நற்சுடலை காத்தரெண நற்சூலி
ஓதரிய பிணமருந் துத்கண்ட தண்டி

அய்யமுறு பரிகலத் தழகு பெறு பேச்சி
அரனோடு திருநடன மாடுமகமாரி
வையமதி லென்கவலை மாற்றி அருளம்மா
மாதுவளர் பேச்சியென் வாழு மாதாவே

ஒழிமேவு மாதி ஒழியாயிருந்தாயே
ஓதரிய நற்சுவமே புரிந்தாயே
வழியான கரகம் துடுக்கை பெற்றாயே
வன்னமுயர் பொற்பிரம் போடெடுத்தாயே

எழியேனை அஞ்சலென் றருள் புரிந்தாயே
என்றுமுன் மக்கள் மனை காத்திருந்தாயே
அழியாதவேப்பநற் குலைபிடித்தாயே
ஆதியே சிவமுத்து மாரிஎன்தாயே

ஓதுவே னுன்புகழை ஆதி அபிராமி
ஒன்றுமறியா ஏழை உன்னடியை நம்பி
நீதியாய் என்றுமே காக்கநினை அம்மா
நீள்புகழ் சடைச்சி எனநின்ற பத்தினியே

வாதுபுகழ் தக்கனுயிர் மாள வைத்தாளே
வையமதிலாங்கிஷம் தனை புகந்தவளே
வேதனைகள் வாராமல் நீ கிருபைபுரிவாய்
மேவரிய பேச்சியென வாழு மாதாவே

ஔவும் நௌவு ஐயுமான சிவசத்தி
அறியும் இறியும் கிலியும் ஐய மானவளே
உவ்வவும் நௌவவும் யவ்வுமான உட்பொருளே
ஓம் நமசிவாய மதி லுற்றிருந்தவளே

செவ்வையுறு மாகாளிசிவ முத்துமாரி
தேவியே பேச்சி பரநாதி யபிராமி
சவ்வும் நௌவளைய பதமே பணிந்தடியேன்
சாற்றவே வந்த வினை தானகற்றிடும்

அக்கர மணிந்த பரனுரிட மிருந்தநீ
அம்மையென அன்பருக் கருளே கொடுத்தநீ
சக்கர கரத்தவன் தங்கையென வந்த நீ
தந்திமுக நாதனோடு தம்பியருள் தாயும் நீ

தக்கவினை கோதாரி தானலைய வைத்தநீ
தாய் தந்தையான நீ சற்குரு தெய்வம் நீ
மைக்கருங் குளலனைய மதுரைவஞ்சியரே
மலையரசன் மகளனைய மாதுபத்தினியே

கந்தமிகு காவேரிப்பூம் பட்டணத்திலுயர்
கருது புகழ் மாணுகர் மகளனைய திருவே
வந்துமீன் வனுயிர் வதைத்து மதுரைப்பதியில்
வல்வைரி எழுப்பியே வழரிடைய சேரி

வெந்து மெரியாமலே நல்வர மழித்து
மேதினிதனைக் கவரயானது கொடுத்து
சந்தோஷ மாகவே கிருபை தந்தருள்மேவு
சத்தியே நாக மங்கலையான திருவே

நகர முதலான சிவசோதி யரனுரிடத்
தரிய பொற் கரமதுடுக்கை போற்குலையும்
வகரமுயர் பொற்பிரப்பங்கோல் மிகுந்த
பலவரமு மேற்பெற்ற வதீகதவ மயிலே

நகரமுட னெமதுகிளை மக்களை மனைசுற்றம்
நண்மையொடு வாழ்கவருள் பண்ணு தமிழம்மா
அகரமுதலான அவ்வும் சௌவுமான
ஆதிவள ராதியே அன்னை கண்ணகையே

சஞ்சல மகற்றி எனை ஆள வந்தாயே
சத்துரு சங்கரியே சகல கலைமாதே
கஞ்சமலர் மீதிலுறை கன்னியே பூலோக
காரனியே சவுந்தரி கனக பத்தினியே

மிஞ்சிவரு நவசக்தி வீரி கெவுமாரி
மேலரிய பரிகலைத் கழுகுபெறு பேச்சி
தஞ்சமென் றவர்வினை தனித்தருளு மயிலே
தாயான நவகோடி சக்தி என்தாயே

ஞயமருவு நாரணி பயங்கரி துரந்தரி
நளின கெம்பீரி நறைவீசு தொடைமேவு
பசலைசெறி மார்பழகி பஞ்சாட் சரத்தி
பரிபுர மலர்ப்புப மங்கய நிறத்தி

கயல்கொள் வரிவிற்புருவ மதிநுதலினழகி
காரணி தயாபரி கருணாகரத்தி
தயவுவைத் தென்றுமே அருள்கிருபை புரியும்
சக்திபரை உத்தமி கறுப்பாயி யம்மனே

இடமுடை சிவசோதி எங்கெங்கு மாகி
எவ்வுயிர் தமக்குமிக இன்பமது நல்கி
அடவுசெறி அக்கினி தனித்துமே எந்தனுக்
கதிகவரம் நல்கியே அன்புதந் தாள்வாய்

மடலவிள செழிங்கமல மாலை மார்பழகி
மானமதுராபுரியில் வந்தரெண சூலி
படவரைகள்சைய மிகு பல்லிய முளக்கமுற
மதுரை மீனாட்சியென வந்த பத்தினியே

இனக்கமுடனே தேவர் புட்பமது சிந்த
ஏளுலகி லுள்ள வர்களும் பதமிறைஞ்சு
வணக்கமுடன் மாமுனிவர் வந்தடிவணங்க
வளர்சித்தர் கின்னரர்கள் மகிழ் சொற்களிசைய

மனக்கடுமை பரிகலம் வந்து புடைசூல
மாதவர் வணங்க மகிழ்வோடினிதிருந்து
இணக்கமுடனேழுபேர் மாரியென வந்த
ஏகபரை சோதியே ஆதி அம்பிகையே

தரைஎங்கு முன்கிருபை யாயிருந்தாயே
தக்கபுகழ் மாரிமகனாக வந்தாயே
உரைசெய்யும் மக்கள்மனை காக்கவந்தாயே
உண்மைதரு மாறுமுக மாகவந்தாயே

வரைதங்கு காசினிகள் வாழவந்தாயே
பாலதனையே மனதா யுகந்தாயே
கரைதங்கு மீரேழுபுவன நாயகனே
காரணச் செல்வமுறு காத்தவராயனே

நகரெங்கு மணிதங்கு சிவகங்கை யணிபொங்க
நரர்துன்ப மகலவுயர் பரையன்பு பெருக
இயல்தங்கு தொட்டியச் சின்னானை வென்றுமுன்
யுயல்தங்கு வயமெங்கு மியல் சங்கை பரவ

மகனன்பு பொறமாலை தனையன்று மணமென்று
வருதுங்க மகிபனே மாரிதன் மகனே
ககனங்கள் செகமெங்கு மூவர்சங்கை பெறவந்த
காரணச் செல்வமுறு காத்தவ ராயனே

பலனன்பு பெறவந்த பரமன் தனருள் தங்கு
பகர் சங்கை உமைமைந்த னெனவந்தபரனே
கலைதங்கு முமைமைந்த னுயர்சங்கை பெறவுந்தன்
கதிதந்த சிவவிந்து எனபந்த புகளான்

சிலையுந்து பலர்விந்து வருவந்து மசூராது
சிரநொந்து விழ அன்று பொருகின்ற திருவே
அலைபுந்து கோதாரி அலைய அருள் புரிவாய்
ஐயனாரென வந்து ஆதி உத்தமனே

மதிதங்கு பானன்பு புரிகின்ற முறையே
வகைதங்கு சிவதொண்டர் பணிகின்ற படியே
துதிதங்கு பதமென்று மனதன்றி மறவேன்
துயர்கொண்ட கோதாரி அகல அருள்புரிவாய்

கதிதங்கு எனை ஆள வருதுங்க பரனே
கடல்தங்கி மருஞ்சல னருள் தங்கு சுதனே
கோதாரிகொண்டபகைதுன்ப மகல அருள்புரிவாய்
குருநாத னெனவந்த குலமறைப்பொருளே

யவ்வென்று மௌவென்று மினிய மறையென்றும்
ஏகமாய் நின்ற பர நாதனுய் வந்து
சௌவென்று நௌவென்று சகலதற்பரமென்று
தானென்று நானென்று சகல கலையாகி

உவ்வென்று முயர் மறைப்பொருளதாய் நீ நின்று
ஊமையொடுங்காள வேஷமது கொண்டு
யவ்வென்று முச்சுடலையாடிவினை தீர்க்கும்
வங்கமடு காயவெனு மாதி வயிரவனே

அரவென்று மைந்தெளுந்தன்பர் நுதல் வேர்வை
அதனிலோராயிரம் சிரசு கொடுவந்து
உரமுந்து தக்கனுர் வேள்வியை யழித்து
உதவினேர் தங்களை வெருட்டியு மடித்து

காமுமீரா யிரமதான புகழான
காத்திடுமுனக்கபய மாயினேனையா
வெருவுந்துகேதாரி வாராமலருள் செய்
வீரலோவீரபத்ரசேவ குருவே

இலகுபுகழ்சேர் முத்துமாரி யபிராமி
இயல்துர்க்கை பேச்சி காமாட்சி மீனுட்சி
கலக விழிமாது கண்ணகை கறுப்பாயி
கருதரிய வீரபத்ர காளி ரணவீரி

தலமெங்கும் மேலானகாத்தவ ராயன்
தகுதிசெறி வயிரவருடன் கறுப்பண்ணன்
மதலைதங்கு குருநாதனையானுர் மங்கவரும்
அனுதினமு மருள்கிருபை தந்துதவுவீரே

வருமனது செய்தபிளை மனதுமறியாது
மலர்விழியிலுன்ற பிளை நுதலு மறியாது
கர மதனிலுற்ற பிளை காமு மறியாது
கருதுமுடல் செய்தபிளை உடலுமறியாது

உரியபிளை செய்தது பொறுத்து மனதன்பாய்
உண்மையுளன் நற்கிருபை தந்துதவி புரிவீர்
பரிகலத் தாதியென வந்தவதரித்தம்மை
பாதமலரென்று மனதே துதி செய்வோமே

அழகுசெறி கன்னனூர் மாரியபிராமி
ஆனந்தி துர்க்கை யமை அந்தரிமாதங்கி
துளவணியு மாயாபுரத்தி கெவுமாரி
சோதியென வாழ்முத்து மாது கண்ணகையார்
புகளமுறு பேச்சி காமாட்சி மீனாட்சி
புகள்கிருபை தா இவர்கள் பரிகலமனைத்தும்
அலவற்ற கோதாரி அணுகாம லென்றும்
அன்புடன் நற்கிருபை தந்துதவீரே
இள மதலை அழுததுதனைக் கண்டு தாயார்
இன்பமொடு பால்கொடுத்தே வளர்கிலையோ
தலைவுள்ள பாலவர் செய் குற்றமது போக்கி
தயவுதந் தென்றுமே ஆள நினை அம்மா
மலைசுற்று மேகநற் குழலழகு மாதே
மாயாபுரத்தியே வளர் கன்னனூர் வாள்
புளகத்ததினுயர் முத்துமாரி யெனவந்த
பூவயே பேச்சிஎன வாழுமாதாவே
இறகுபெறு புகளில் வருமரி சகோதரியே
ஈசனூர் வரமதத்திருந்த பத்தினியே
திறமான வடவையனல் மீதிருந்தவளே
செகமெங்கு முய்ய அறமேவளர்த்தவளே
நறமேவு சீதான் தங்கையானவளே
நான்முகன் சிரசிலொரு சிரமொடுத்தவளே
உறைகமல பதயோக கயிலை நாரணியே
உண்மைதந்தெமையாளு முமையம்மை திருவே
அணவாத கலியாணியதிரூப தாரணி
அகிலமுழு தறமே வளர்த்த அபிராமி
மனமகிழ்ந் தன்புதரு மாயிமகாரி
மாதரி துரந்தரி மதன கெம்பீரி
கனகநற் கயிலைவளர் காவினோதரியே
காளிதனை அன்பினொடு மாளுமாதாவே
எனது பகை வினைதீர வந்த உமை அம்மையே
ஏகபரமேஸ்வரி பாதமலர் துணையே

பலவரிக் காவியம் முற்றிற்று.

# சின்னக்காவியம்

அமிர்த பரிபூரணி நளின விளி காரணி
அன்னபரிபூரணி சொன்ன மருள் பாகரி
திமிர்ததிமில் மிதியென்ன நடனமிடுமகாரி
தேவர்தொழு தேவிதன் தாளிணை வழுத்த
குமிர்த நல்வாயு மும்மதமு மிருபுயமும்
குடவயிறு நுதல் விழியு முடைய மார்பழகும்
திமிர்தமா மும்மதத்தைந்து கரமுடையதொரு
தொந்திவயிறன் சரணமென்று நற்றுணையே
துணையான கன்னனூர் மகமாரி அம்மைதான்
தொழுதவர்க் கருள் கொடுத்தினி துகந்தருளி
இணையான தெய்வங்கள் புவிமீதிலுண்டோ
உன்கிருபை தந்துநீ எங்கள் நோய் தீர்ப்பாய்
கணையாழி கையில் தரித்தவன் தங்கையே
காவலா யிருமென்று காத்தானை யீன்றாய்
துணையாக வந்துநீ அபயமே தருவாய்
சோதியே ஆதியே மகமாரி அம்மனே
மகமாரி என்றுனை நினைப்பவர் தமக்கு
வாதமொடு பித்தஞ் சிலேற்பனங் கண்ணோய்
பகைதோஷ மானதொரு நோய் கிரக தீவினைகள்
பாடுபட்டோடுமுன் நாமங்கள் சொன்னாள்
அகமகிழ்ந் தஞ்சலென் றருள்கிருபை புரிவாய்
அனலெனும் கனதணித் தாளும் நீ அம்மா
சகலகலை வல்லியே கன்னனூர் வந்த
சத்தியே சித்தியே கமலா சனத்தியே
கமலமுக மழகொழுகு தெரிவை யுமையவளுந் நீ
கலைபலதெரிதொழுகு மாகர சிவாயநீ
அமலபரமேஸ்பரி விமல கிருபாகரி
அரலோக பரலோக ஆனந்தரூபிநீ
கமலமக மேருதனை வில்லாய் வளைத்த நீ
காமனொடு தக்கன் சிரந்தனை ஒடித்தநீ
அனவரதமுங் கிருபை தந்துரட்சிப்பாய்
அதிகவரமுடையதொரு மகமாரியம்மனே

அதிகவர முடையதொரு தவசது புரிந்தாய்
அத்தனுர்கிருபைதந் தகமிகமகிழ்ந்தாய்
மதிவதன முடையதொரு மங்கைநீ அருளென்ன
மாமறையு முத்துநீ தாவென வுரைக்க

கதியாவு பிறைசூடு நாதனுமதருளால்
கண்ணுதலு மோரொன்று சோதிக்க நல்க
சதிரமொளி கனல் தணித் ததிகவரமே பெற்ற
சத்தியே கன்னனூர் மகமாரியம்மனே

கன்னனூர் வந்தநீ கம்பையில் வாழ்ந்தநீ
கரகம் தொடுத்த நீ சூலியது பிடித்த நீ
முன்னமே வந்தநீ முப்புர மெரித்தநீ
மூவர்தொளு மூர்த்திநீ மூவுலகை யாண்டநீ

புன்னுமரை தேவிநீ புன்னை நிளல் வந்தநீ
பங்கயன் தேவிநீ பாரளந்தவளுநீ
அன்னையேயின்னையே எனை ஆளவந்த
ஆதியே சோதியே அகில நாரணியே

நாரணி நால்வருண சாதனைக்காலால்
நவரத்ன நால்வேத நல்விரத மீந்து
பூரணமதான பொற்கும்பமது வைத்து
பூவையர்கள் மலர் சொரிந் தேகவரிவீச

வாரணத்தேவத் வலுவீரர் புடை சூள
வாசுகி தன்னை வட மாகவே பூட்டி
காரண மதானபொற் தேர்மீதி லேறிவரு
கன்னனூர்ராட்சி காமாட்சி யானவளே

ஆச்சிநீ அபிராமி யாகவந்தாயே
ஐயனொடு பரிகளஞ்சூள வந்தாயே
பேச்சிநீ பெருமாளுடன் பிறந்தாயே
போரனமீனாட்சி யாகவந்தாயே

காட்சிதந்தே சேரி காக்க வந்தாயே
கனல்தணித் தினித்திக வரமழித்தாயே
வாட்சி சடைச்சி யென வந்தவளும் நீயே
வடிவான ஆயிரம் கண்ணியானவளே

ஆயிரங் கண்ணிநீ அகிளமுழுதாளிநீ
அட்ஷர மதான நீ அக்கினிதனித்த நீ
வயிருபுயத்திநீ வேத முதலானநீ
வேதாந்த ரூபிநீ வேதனைதணித்த நீ

காயுகமலாட்சி நீ காமன் சிலைச்சி நீ
கச்சனி முலைச்சிநீ காரண நிறத்திநீ
தாயுநீ தந்தைநீ தந்திமுகனைப் பெற்ற
தையலே மகமாரியான மாதரியே

மாதரி புரந்தரி வரந்தரு குமாரி
மாசது விலாத மதிபோ லழகினுளே
ஆதரி யுனுதர விலா லொருவருண்டோ
ஆருதவி செயதனை ஆளநினை அம்மா

பாதரி தரித்தபர நாதருடனுடும்
பாதமலரே துணைபராபர பவாணி
நாதரி நடம்பரி நலம் புரிவராகி
நரலோக பரலோகக்கர்ரி அம்பிகையே

அம்மைநீ அமிர்த்ததி லன் றுதித்தாயே
அழகான அலரிமலராகி வந்தாயே
செம்மைநீ தேசியின் கனியுகந்தாயே
செவ்வந்தி மலர்மீது சேர்ந்திருந்தாயே

எம்மை யாமுரசன் மகளாக வந்தாயே
எளிலான எக்கிஷந் தனில் வளர்ந்தாயே
உண்மையாய் அக்கினி தனிலுதித்தாயே
உலகு தனிலதிக வரமான நஷாசியே

உலகுதனில் மகமாரியா யவதரித்து
ஓதரிய முத்துவகை தானது உகந்து
நலமான ஈசருக்கே முத்தெறிந்து
நாரிஉமையாய்வந்து நற்கிருபை செய்து

கலைசெறியு மாரிஉரு வாகியே வந்து
காத்தனை நல்மகவ தாகவேயின்றுய்
நலமான தொட்டியன் னிடமாக வந்த
நாதநா ராயணன் தங்கையானவளே

காதனுர் நான்முகன் கட்டளை இருந்தாலும்
நாடுமோ உனையன்றி நம்பின பேர்க்கு
வேதனைகள் முடுகுமோ நோய்பிணிகளணுகுமோ
வேறுமொரு துஷ்டம் பசாசுவினை வருகுமோ

பாதமே கெதியென்று நம்பினபேர்க்கு
பயமு முண்டோ செத்தபிணமு முயிர்கொளாதோ
நீதியோ உன்னை நினைப்பவற் கிடறுவா
நீதியோ சோதியே காத்தவராயனே

காத்துநீ சேரிகனல் மாற்றவந்தாயே
கட்டாரி சொட்டையம் கையம்பு சவளம்
மாத்திரைக் கோலுடன் சாற்று பரிவட்டம்
மத்தள முடுக்கை தவில் முக்க விருதூத

நாற்றிசை களெங்கனும் கீர்த்தி ஒலிபாட
நான்மறைகளோத வெண்சாமர மிரட்ட
போற்றி செய்தே புஷ்பமாரி மழைபொழியவரு
பூலோக ராசனே ஈஸ்வரி பாலனே

## வாழி

ஈசனுடன் நாலுமறைவேதநுதல் வாழி
இந்துமதி ஒத்தளக ஈசுபரி வாழி
வீசுபுகளுடைய ராசசிங்கமும் வாழி
விளைசென்னல் மழைபெய்து நீடூழிவாழி

வாஷமுள்ள நாடுநகரங்களும் வாழி
வரிசைபெறு விஸ்வர்குலம் மரபுமிக வாழி
ஆசுதமிழ் குற்றம்பொறுத்து நிதம் வாழி
அமிர்த பரிபூரணி வாழ வாழியதே

## மங்களம்

அரியும் மரையும் யரையும் என்று மங்களமே
அரசர் செங்கோல் நிதந்தளைக்க மங்களமே
தெரியு மறையுன்னு சிவசமய மங்களமே
சென்னல் மழை உன்னுபுவிவாழ மங்களமே

உரைசெய் தமிழ்மாலை பகர்வொருமங்களமே
உலகிலுள்ள நோய்பிணிகள் கலகல மங்களமே
பாவைசூள் புவியிலருள் மேவுபரையான
பகர்முத்துமாரிபத மலரு மங்களமே

# அம்மன் குளுத்தி

சீர்பொருந்து கைங்கரனே திருமால் மருகோனே
1 கார்பொருந்தும் யானைமுகக் கணபதியே கற்பகமே
பார்பொருந்தும் கண்ணகையார் பழிவாங்கிக் குளிந்தகதை
2 ஊர்செழிக்கப் பாடுகிறேன் ஓர் பிழையும் வாராமல்
ஓர்பிழையுஞ் செய்யாத உலகுபுகழ் கோவலனை
3 பெருமழுவாத கொல்லுவித்த பிளைமாறனென வகுத்த
கருதரிய வாயர் மனைகனல்மூளச் சாபமிட்டு
4 இநமுலையும் குளிர்ந்தகதை யானுரைக்கக் காப்பாமே
காளிபிடைசூள காவரிப்பூம் பட்டிணத்தில்
5 வாழ்வணிகர் தன்குலத்தில் என்மாதே குளிந்தருள்வாய்
இலை வேம்பின் கீழே இருந்து வருந்தாமல்
6 வளமை பெரிதுடைய என்மாதே குளிர்ந்தருள்வாய்
மீகாமனுக்கு மகிந்தவரம் கொடுத்து
7 நாகமணி வாங்க நயந்தாய் குளிர்ந்தருள்வாய்
சொற்பெரிய மானாகர் துப்யகுலத்தே யுதித்த
8 சர்பமணிதான் தரித்த என்தாயே குளிர்ந்தருள்வாய்
என்னேரமு மெண்ணி மேலான கோவலர்க்கு
9 வன்னி வழிநடந்த மாதே குளிர்ந்தருள்வாய்
மாதகிக்குப் பொன்தோற்று வாழிவனிகர் தன்னுடனே
10 காதலித்துப்பின்போன என்கன்னியே குளிந்தருள்வாய்
காவரிப்பூம் பட்டணத்தைக் கைவிட்டகன்ற பின்பு
11 பூத்தமலர்ச்சோலையிலே புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்
சாற்றரிய தக்க வுந்தியனார் தன்னுடனே
12 பூவிரியும் சோலையிலே புகுந்தாய் குளிர்ந்தருள்வாய்
ஓடத்திலேறி உயர்காவரி தான் கடந்து
13 தேடரியதென்மதுரை சென்றார் குளிர்ந்தருள்வாய்
கொக்கினமும் புள்ளும் குழலோசையும்கேட்டு
14 தக்கவழி நடந்தாயே குளிர்ந்தருள்வாய்
தென்னம்பழம் சொரிய தேமாங்கனியுதிர
15 மன்னிவழி நடந்த என்மாதே குளிர்ந்தருள்வாய்
கோலப்பதி தனக்கு கோவலனார் போனபின்பு
16 துக்கப்பதிகடந்த தோகாய் குளிர்ந்தருள்வாய்

கட்டிக்கிடந்ததொரு கால்ச்சிலம்பு ஒன்றெடுத்து
17 செட்டிக்கோவலனார் சென்றார் குளிந்தருள்வாய்
மணைதொளிக்கும் தோளான் வணிகர்தனைக் கொல்லுவித்த
18 சொற்பனத்தைக் கண்டெழுந்ததோகாய் குளிர்ந்தருள்வாய்
தேறிய கனாவை திரும்ப விடைச்சிகுறைத்து
19 சீறி மதுரையிலே சென்றாய் குளிந்தருள்வாய்
தன்கணவன்பட்ட கழுந்தேடியே நடந்து
20 அன்புடனே வந்துயிரை மீண்டாய் குளிந்தருள்வாய்
தட்டானார் முன்கொண்ட தலைவர் தனையகன்று
21 பட்டீரோ என்றழுத பாவாய் குளிந்தருள்வாய்
கூறும் மொழிகளெல்லாம் கோவலனார் தான்கேட்டு
22 ஏதோ அபிமானம் என்றார் குளிந்தருள்வாய்
வாசலது பூந்து வந்த உயிர் போன பின்பு
23 பூசலிடைப் பாண்டியனைப் போனாய் குளிந்தருள்வாய்
தீதறியாக்கோவலரைக் தென்னவனார் வெட்டுவித்த
24 ஏது தறையாலோவென்றாய் குளிந்தருள்வாய்
பட்டேன் பழியெனவே பாண்டியனும் போய் விழுந்தான்
25 கொண்டாளோ கண்ணகையாள் கோவலரைக்கொண்டதற்காய்
தட்டான் பொடியாக தார்வேந்தன் நீறாக
26 தட்டானைச் சுட்டெரித்த தாயே குளிந்தருள்வாய்
நல்லவரம் தங்கள் முன்னே நாகமணி தான் வாங்கி
27 கொல்லாமல் பாண்டியனைக் கொன்றாய் குளிந்தருள்வாய்
எண்ணில் வரும் பழிக்கு எண்ணவொண்ணாப் பழிவாங்கி
28 சொல்லரிய தென்மதுரை சுட்டாய் குளிந்தருள்வாய்
ஓடியே ஏளுகதவடைத்தான் பாண்டயனும்
29 ஏளுகதவூடுருவ மார்புருக தைத்ததுவே
சதிகேடு செய்தவினை வேந்தனை யகன்ற பின்பு
30 பொதுவரிடம் தனிலே போனாய் குளிந்தருள் வாய்
வாளொன்றெடுத்து வலமுலையைத் தானரிந்து
31 கோலாடைபாகத் தணித்தாய் குளிந்தருள்வாய்
அரிந்த முலையோடும் சொரிந்த குரிதியுடன்
32 இடையகந்தனிலே ஏந்திளையும் சென்றனளே

விரைந்துமனை புகுந்து வெண்ணை தனையள்ளிவந்து
33 அரிந்த முலையதனில் அங்கவளும் அப்பினளே
மதுராபுரித் தெய்வம் வாய்மதனை தான்கேட்டு
34 சதுராக வேகம் தணிந்தாய் குளிர்ந்தருள்வாய்
ஆயர்குலப் பாவையரின் அன்னமே தார்குழலே
35 தூயவனச் சோலை சுடாதே குளிர்ந்தருள்வாய்
எச்சேரிவேகினும் இடைச்சேரி வேகாமல்
36 பட்சேரி வேகினும் பறைசேரி வேகாமல்
என்முலை குளிர்ந்தாப்போல் நீரும் குளிர்ந்தருள்வாய்
37 சொற்பெரிய மானகர் துய்ய குலத்துதித்த
கற்புநெறியுடைய என் கன்னி குளிர்ந்தருள்வாய்
38 எண்ணுமற் செய்தவினையால் இணைமாறன் பதியளித்து
நன்று யபிமானம் நயந்தாய் குளிர்ந்தருள்வாய்
39 கூடலது கடந்து கோவலரைத்தான் கண்டு
ஏது மபிமானம் மென்றாய் குளிர்ந்தருள்வாய்
40 தன்கணவன் பட்டதிசை யதனைத்தான் நோக்கியே
பொன்னுலகம் வீற்றிருக்கப் போனாய் குளிர்ந்தருள்வாய்
41 தேவர்களெல்லாம் திருவாகனத் தேரேறி
கோவலரை நீங்காத என் கோதாய் குளிர்ந்தருள்வாய்
42 வாராய் புறவினமே மனர் மாதியைக் கைத்தொழுவோம்
ஓதாய் புறவினமே ஓம் நமசிவாய மென்றும்
43 கோலப் புறவே கோடுவரா வெற்றிலையே
அண்டனைய கோபம் என்கோதாய் குளிர்ந்தருள்வாய்
44 கொண்டனைய கோபம் என் கோதாய் குளிர்ந்தருள்வாய்
ஆள்போல் தளைத்து அறுகதுபோல் வேரோட
45 மூங்கில்போல் சுற்றமும் முசியாமல் வாழியவே
பாடினோர் வாழி பழுதகற்றினோர் தான் வாழி
46 கேட்டோர்கள் வாழி கிளைமன்னர் வாழியதே

அம்மன் குளுந்தி முற்றிற்று.

தேவிதுணை.

# சன்னி, பேய், பிசாசு, தோஷம், முதலிய சகலவற்றிற்கும்

# குளை அடிக்க

அரி ஓம்நமோ! பச்சை நிறமும் பவளவாயும், அரையில் கட்டிய
சந்திர காவிப்பட்டும் ஒட்டியாணமும் மாரிபிலிட்ட நூல் மாலையும்
களுத்திலிட்ட ஆபரணமும் காதிலிட்ட கவசகுண்டலமும் கிரீடமும்
திகளேந்திய இளமாது முல்லையும் நவரத்தினமாகிய பல்லும் மூக்குத்
தியும் சிலம்பும் சிங்கக்கொடியும் மாறொருகை மழுவொருகை செங்
கொருகை சக்கரம் ஒருகை அன்பர்க்குச் சொர்னமளித்திடு கரமும்
மஞ்சாதென்னும் மத்தியகரமும் துலங்கிய விபூதியுமாய் எழுந்தருளி
யிருப்பாள் ளென்னம்மை மோகாம்பரி மாங்கிஷமாது நீயே சிவாகா
ஓம் அங்ங றிங்ங மத்தே சாத்தே மரிசெய்ம சாத்திரி நீலிநீலி மோகாம்
புரி நீலகண்டி மோகாம்புரி தூளி தூளி தூளி தூளி உச்சாடு உச்
சாடு பூதப்படையும் போகாவியாதியும் பிச்சி பித்தத்தியும் பிடி சன்
னியும் சனீத்த சன்னியும் சன்னிவகை பதினெட்டும் விட்ட பிசாசும்
வைத்த சூனியமும் ஆலகால மரத்தில் ஆணி அறைந்தும் மண்ணு
றையில் புதைத்த பலபல சூனிய முள்ளதும் வயிற்றுக் கழிச்சலும்
மலஞ்சலம் மறிபட்டதும் எட்டுக்குழறியுர் கூடிய நஞ்சும் வேதாழ
பூதமும் மூன்றுகப் பிளவை மூன் கண்டமாலை காலடி யரிப்பு அரை
யினில் புத்துடன் பத்தெளுர் துடையினில் படுவன் தொண்ணூற்று
றும் ஐநூற்றன்பதும் நாணுவலியும் கன்னக்கிரந்தியும் களலைகண்ட
மாலையும்மின்றி எழுந்திடு மீளாவியாதியும் இருமல் றோகம் எண்
பத்துமூன்றும் தலைவலி சூலை தண்டுப்பிளவையும் அண்டவாதம்
அடங்காக் கழிச்சல் பொத்திக்கரப்பான் புத்துடன் கண்வலி காயம்
பூக்காச்சல் கண்ணில் சிகப்பு விழிகண் தருடு விழி மினுமினங்கல்
குவளைச்சலந்தி குத்து விப்புருதீ நாகப்படலம் நத்தைப்படுவன் புருவ
வாதம் புகை எழு புண்ணும் சுருக்குடன் இளைப்பு முடக்கிய வாதம்

முப்பத்து மூன்று எழுந்திடும் வியாதி எழுபத்திரெண்டு தோன்றிய வியாதி தொண்ணூற்றுமுப்பிறமுனை கட்டு கட்டு கரிமுகனே வெட்டு வெட்டு வேலாயுதத்தி நாணே சுட்டெரி சுட்டெரி ஏநெடா கெடுவா நானெடாமோகாம்புரி தீண்டாதவரைநீண்டுவதேதடா சிவநடியாரை அணுகுவதேதடா திரு நம்பிமாய ஐய்யன் கோவில் அதிரப்பிடுக்கி மற்றுமுள்ள கோவில் மண்டு தீயிட்டு சாமுண்டி கோவில் தனலா யெரித்து உள்ளூறங்கள் பேசி வந்தேன் வாளாளாறுத்திடு விழியா லெரித்திடு சிந்தீயிற் தீயால் சினக்கும் மோகாம்புரி அம்மை கரத்தால றுத்த மோகாம்புரி எரி எரி திரிபுரமெரிய அகோர உருத்திராயா நமோ ஓடம்மா ஓடு.

அம்மன் உற்பத்தி முற்றிற்று.

---

கலைமகள் அச்சகம் காலாடிப்பேட்டை சென்னை 19.

**உங்கள் வாழ் நாட்களில் வேலையில்லை என்று**

மனதில் கவலை வேண்டாம்

**மாதம் 100-ரூபா முதல் 500 ரூபாய் வரையில்**

சம்பாதிக்கக்கூடிய அரிய போதனைகளடங்கிய

## ★ சுதேசீ கைத்தொழில் முறை ★

இதில் பலவிதமான சோப்புகள், மெழுகுவத்திகள், வச்சிரங்கள் சாக்குகள், பாணவேடிக்கை மருந்துகள், வார்னிஷ்கள், தீக்குச்சிகள் இங்கிகள், சாயங்கள், வெள்ளி, தங்கம், பொன், இவைகளுக்கு கில்டுபோடுதல், மாஜிக் இங்கு, வரணதினுசிகள், பெப்பரமெண்டுதினுசுகள், ஓமம்வாட்டர் பலவித பல்பொடி, கூந்தல் தைலங்கள், அத்தர், செண்டு தினுசுகள், ஊதுவத்திகள், பலவிதகரை எடுக்கும் முறை சேவிங்சோப்பு, இன்னும் வாசனைசோப்பு செய்யு முறை, நரைமயிர் கருக்கும் தைலம் செய்யுமுறை, மூக்குதூள் செய்யும் முறை, சர்பத்துகள் செய்யும் முறை, டபாஸ்கள், பத்தாபுகள், சுருசுரு வத்திகள் முகவசிகா பவுடர் செய்யும் முறை, இதைப்போல் அநேக செய்முறைகள் பிரபல அனுபவசாலிகளால் எழுதப்பட்டிருக்கின்றன.

சுமார் 500 முறைகளுக்குமேல் இந்நூலில் அடங்கி இருக்கின்றன

**இதன் விலை ரூபா 1-8-0**

**சரஸ்வதி புத்தகசாலை 175,** செட்டியார் தெரு கொழும்பு.

# SARASWATHEE BOOK DEPOT,

## 175, Sea Street COLOMBO.

## சரஸ்வதி புத்தகசாலை.

### 175, செட்டியார் தெரு கொழும்பு

---

# திருக்குறள்.

---

## பரிமேலழகருரை - தெளிபொருள் விளக்கப் பதவுரை - விசேஷக் குறிப்புகள் முதலியவற்றுடன்.

*தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்தருளிய திருக்குறளென்னும் இந்நூலானது 1330 குறள் வெண்பாக்களால் செய்யப்பட்டு பாஷையின் உயர்வை விளக்குவதாயும் சொற்பொலிவு முதலியபாகுபாடுடையதாயும் இராஜ தந்திர முதலிய பலவகைப்பட்ட சிறந்த நீதிநெறியை நன்குணர்த்தத் தக்கதாயும் எல்லாச்சமயிகளானும் இனிதேற்றுக்கொள்ளப்பட்டதாயும் உள்ளது. மேலும் தமிழ்ப் பாஷையில் விருத்தியடைய விரும்புவோர்க்கு ஏற்ற நூலாகவும் இருத்தலால் இதன் பெருமை குன்றின்மேலேற்றிய விளக்குப்போல் விளங்குகின்றது.*

*இந்நூல் வேதசாரமாயிருத்தலினால் ஆதியில் உரையாசிரியர் பலர் இதற்குஉரையியற்றினரெனினும் அவற்றுள் பரிமேலழகர் இயற்றிய உரைசொற்பொலிவும் பொருணயமும் நிறைந்து விளங்குவதால் சான்றோர் இவ்வுரையையே மேலாகக்கொண்டு வழங்கிவருகின்றனர். ஆதலால் தமிழ்வேதமாகிய திருக்குறளும் இதற்கும் பரிமேலழகர் செய்த உரையும் கற்றோர் யாவரானும் விரும்பத்தக்கனவே. ஆதலின் இவ்வரிய நூல் பரிமேலழகருரையுடனும் தெளிபொருள் விளக்கப் பதவுரையுடனும் விசேஷக் குறிப்புகளுடனும் நல்ல கிளேஸ் கடிதத்திற் பதிப்பித்து அழகிய கலிகோ பைண்ட் செய்யபெற்றிருக்கிறது.*

**விலை ரூபா 10**

சிறந்த நூல்! குறைந்த விலை!!

# நாலடியார்

## மூலமும்-உரையும்

அரசர், அந்தணர், தாய், தந்தை, ஆசிரியர், நட்பினர், உறவினர், மேலோர், கீழோர், முதலாயினோருடைய தன்மைகளை அறிந்து அவர் மாட்டுத் தக்கவாறொழுகி, இன்மையிலின்பமும் மறுமையில் முத்தியும் பெறும்உபாயவழிகளை உணர்த்தும் இப்போது நூல் 400 வெண்பாக்களையுடையது. சமணமுனிவர்களால் அருளிச்செய்த பதினெண் கீழ்க் கணக்குகளில், இதுவுமொன்று இதற்குத் தமிழ்ப்புலவர், களத்தூர் வேதகிரிமுதலியார் அவர்ளியற்றிய உரையுடன், உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு அழகிய பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

கல்வியறிவைக் கோரும் ஒவ்வொருவருக்கும் உயர்தரக் கல்விச்சாலை மாணவர்க்கும், இது மிகவும் உபயோகமானது. சிறந்த நீதிகளைப்புகட்டக்கூடியது.

இதன் விலை ரூபா 3

# ஆங்கில ஆசான்

## இப்புத்தகம் ஒன்றே உபாதியாயர் உதவியின்றி வெகுவிரைவில் யாவரையும் ஆங்கிலத்தில் வல்வராக்கும்.

இதைப்போல் ஆங்கில பாஷையைப் போதிக்கும் நூல் வேறே கிடையாது. தமிழ் எழுத்துக்களைக்கொண்டே ஆங்கிலத்தில் எழுதவும் பேசவும் நன்றாய்த் தெரிந்துக்கொள்ளலாம்இதற்கு உபாத்தியாயர் தேவையில்லை. இதில் ஆங்கில எழுத்துக்களையும் பதங்களையும் தமிழில் உச்சரிக்கும் விதங்களைக் காட்டி ஆங்கிலபாஷையிலுள்ள இரண்டெழுத்துச் சொற்கள் முதல் பலவெழுத்துச்சொற்களையும்விவரித்து அவற்றிற்குச் சரியான தமிழ் உச்சரிப்புக்களையும் தமிழ் அருத்தங்களையும், அவ்வப்பதங்களைக்கொண்டவாக்கியங்களையும், படிப்படியாகயாவரும்

வெகுசுலபமாய்த் தெரிந்து கொள்ளும்படி எழுதப்பட்டிருப்பதுடன் மிருகங்கள், பட்சிகள், வீட்டுச் சாமான்கள் உணவுப்பொருள்கள்குடும்பவிவகாரங்கள். வியாபாரவிஷயங்கள், தேகாரோக்கியம், சரீரக்கூறுகள், உத்தியோக விஷயம், நீதிஸ்தானம் முதலியஅரசாங்க விவகாரங்கள் சிநேகசம்பாஷணைகள் கடிதமெழுதும்முறைகள், கிராமாதிசயங்கள் பட்டணவாழ்க்கை தொழிற்சம்மந்தமானவிஷயங்கள். விண்ணப்பங்கள், கலியாணமுதலிய சுபலிகிதங்கள், வியாசங்கள், சில கதைகள் உலக அனுபவத்திற்கான சகலவிஷயங்களும் சுலபமானநடையில்ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன இஃது ஆங்கிலம் கற்க அவாவுறும் கிராமாதிகாரிகள், கணக்கப்பிள்ளை தோட்டக் கங்காணிகள் கீழ்தர உத்தியோகஸ்தர்கள், இராணுவ சிப்பாய்கள் ,வியாபாரிகள், ஐரோப்பியரிடமிருக்கும் தொழிலாளர்கள் முதலிய யாவருக்கும் மிகவும் அவசியமானது.

**860 பக்கங்கள் கொண்ட புத்தகம் விலை ரு 5 50**

## பதினெண் சித்தர்கள்

# ஞானக்கோவை

**3 பாகங்களும் ஒன்ருய்ச் சேர்த்து அச்சிட்டு உயர்ந்த கலிகோ பைண்டு செய்தது.**

**விலை ரூபாய் 3-50** மேற்படி கிளேஸ் ரூபாய் 5.

**இதில் அடங்கிய நூல்களாவன**

ஆத்திச்சூடி ஞானம், சுந்தரமூர்த்திஞானம், அகஸ்தியர் ஞானம் கருவூரார் பூஜாவிதி, பாம்பாட்டிச் சித்தர் பாடல், இடைக்காட்டுச் சித்தர் பாடல், அகப்பைச்சித்தர் பாடல், குதம்பைச்சித்தர் பாடல் அழுகணிச்சித்தர் பாடல், கடுவெளிச்சித்தர்பாடல், நந்தீஸ்வரர்பூஜா, விதி, இராமதேவர் பூஜாவிதி, அகஸ்தியர் ஞானம், (வேறு) ஞானக்கும்மி, சிவவாக்கியர் பாடல், பட்டினத்தார் புலம்பல். அகஸ்தியர் ஞானம், ஷெ தனிஞானம், ஞானோபதேசம். அகஸ்தியர் சுத்தஞானம் வால்மீகர் சுத்தஞானம், திருமூலநாயனூர்ஞானம், சட்டமுனிஞானம் சுப்பிரமணியர்ஞானம், காயக்கப்பல், பட்டினத்தார் ஞானம், வாலைக்கும்மி, பத்திரகிரியார் புலம்பல், ஞானரத்தினக் குறவஞ்சி. உடலறி

விளக்கம், நெஞ்சறி விளக்கம், ஞானயேற்றம் சிவானந்தபோதம். பரமானந்தபோதம், உயர்ஞானசர நூல் சாஸ்திரம், சிவநாமவளித்திரட்டு, காகபுசுண்டர் ஞானம்.

## நீதி நூற்கொத்து
### முதற்பாகம்

ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன், உலக நீதி, வெற்றிவேற்கை வாக்குண்டாம். நல்வழி, நன்னெறி இவ்வேழு நீதிநூல்களும் உரையுடன் அழகிய பைண்ட் செய்யப்பெற்றது.

விலை ரூபா 1

கிளேஸ் கலிகோ பைண்ட் விலை ரூபா 1-50

## அஷ்டதிக்கு ஆரூடம்.

இதில் அஷ்டதிக்கு ஆரூடம், பஞ்சபட்சி ஆரூடம், ஆஞ்சநேயராரூடம், ஜெயமுனிவராரூடம், வால்மீக ராரூடம் முதலிய ஆரூடங்களும், பஞ்சபட்சி சக்கரமும் அடங்கி யிருக்கின்றன.

ஆரூடம் அறிய விரும்புவோர்க்கும், சோதிடர்க்கும் இன்றியமையாத நூல், ஞாயறு முதல் சனி ஈறுகவுள்ள தினங்களில் ஜாமத்தோடு திக்கின் பலன்கள் நன்கு விரிவாக உரைக்கப்பட்டிருக்கின்றன

பஞ்சபட்சிகளின் ஆரூடமும், ஆஞ்சநேயர், ஜெயமுனி, வால்மீகர் ஆரூடங்களும் கலந்துள்ள இந்நூலில் பல அரிய விஷயங்கள் உள்ளன

விலை ரூபா 1-50

## சர்வ தேவதா வசியம்

பகைவர்களினுலும் பேய் பிசாசுகளினுலும் வரும் பில்லிசூனியம், மாரணம் முதலியவற்றைத் தடுப்பதற்கும், நோய் நொடிகள் அணுகாமல் தடுத்துக்கொள்வதற்கும், தேவதைகளையும், மனிதர்களையும் வசப்படுத்திக்கொள்வதற்கும் நம்முடைய காரியத்தை வெற்றிபெறச்

செய்து கொள்வதற்கும், ஐஸ்வரியத்தையும் செல்வாக்கையும் அடைந்து கொள்வதற்கும் பெரிதும் உதவியாகவிருந்து அவைகளனைத்தையும் நாம் எண்ணிய வெண்ணப்படியே முடித்துத்தரவல்ல மந்திரங்களும், யந்திரங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன. இதில் ஒவ்வொரு தேவதைகட்கு குரிய மந்திரங்களும், மூலமந்திரங்களும், யந்திரங்களும், பூஜைகளும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. தண்ணீர் மந்திரித்தல், வேப்பிலை மந்திரத்தல், விபூதி பிடித்தல், பிசாசு விலக்கல், கழிப்புக்கழித்தல், மந்திரக்கட்டடல். நக்ஷத்திர பலாபலன், அவற்றின் சாந்திகள் முதலியனவு முண்டு.

இரண்டு பாகமும் சேர்ந்தது விலை ரூபாய் **1—25**

# ஸ்தோத்திர திரட்டு

(9-ம் பதிப்பு)

தேவாரம்; திருவாசகம், திருவிசைப்பா. திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், திருமொழி, திருமந்திரம், பதினொராந்திருமுறை, இராமலிங்கசுவாமி பாடல், கந்தரலங்காரம், தாயுமானசுவாமி பாடல், பட்டிணத்துப் பிள்ளையார் பாடல், முதலியவற்றினின்றும் திரட்டிய அரிய தோத்திரப்பாக்களும்.

திருவெம்பாவை, திருப்பொற் சுண்ணம், விநாயகர் அகவல், விநாயக கவசம், கந்தர்சஷ்டி கவசம், திருமுருகாற்றுப்படை, கந்தரனுபூதி, முழுவதும், இன்னும் சைவசமயிகளுக்கு இன்றியமையாத பல அரிய விஷயங்களும் அடங்கியது. 4 அழகிய கலர்ப் படங்களுடன் நல்லகிளேஸ் கடிதத்திற் பதிப்பித்து அழகிய பைண்ட் செய்யப்பட்டது. விலை ரூபா **1-50**

# அனுபவ ஹஸ்தரேகை சாஸ்திரம்

(சக்தி தாஸன் எழுதியது)

நூற்றுக்கணக்கான படங்களுடன் கூடியது

விளக்கமான அநேக படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசன நூலறிவினால் ஆயுள், விவாக, லாபம், குணம், பத்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்,

டம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரியசித்தி, சௌக்கியம், தயை அஜீரணம், இல்லற சுகம், மரணம், முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். அன்றியும் இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும், இன்னும் அநேக மர்மங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாகவும் இருக்கிறது. இக்காலவரலாறுகளையும் அறியஇவ்வனுபவ நூல் துணையாகும். உங்கள் கையிலுள்ள ரேகைப் பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்துகொள்ளலாம். விலை ரூபா 4

# சோதிட அரிச்சுவடி

### 4 பாகக்கட்டிடம்

ஒருவருதவியுமில்லாமல் சோதிடத்தை நீங்களே சுலபமாக கற்றுக்கொள்ளலாம். ஜாதகங்கள் ஸ்புடமும் செய்யலாம். சோதிடசாத்திரத்திலுள்ள எல்லாவித கலை நுட்பங்களையும் தெரிந்துகொள்ளலாம் எல்லோரும் தெரிந்து கொள்ளும்படிச் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூபா 2—50

## பெரிய நூதன

# சோதிட சில்லரைக் கோர்வை

### மூலமும்-உரையும்

அநேக ஏட்டுப் பிரதிகளை ஆராய்ந்தும் அவற்றில் சிறந்த முக்கியமான 25—விதமாகிய சோதிட புஸ்தகங்களை ஆராய்ந்து அவைகளே சரியென தீர்மானித்து முன்னோரெழுதி ஏட்டுப் பிரதியாயிருந்ததைத் தற்கால மனித வகுப்பினரில் அநேகருக்குத் தெரியாமலிருந்தமையால், அவைகட்குச் சரியாக உரையெழுதி கால நிர்ணயத்தின்படியே சக்கரங்களமைத்துக் கிரகங்களிருக்கும் காலபலன் லக்ஷணத்தையும் விபரமாகயெழுதி சுத்தப்பதிப்பாய் அச்சிட்டுவெளியிட்டிருக்கிறோம். விலை ரூபா 4

# கண்கட்டு வித்தைகள்

ஜப்பான், ஜெர்மனி, சைனு, ப்ரான்ஸ் முதலிய பலதேச அபூர்வ வித்தைகள் 2000 அடங்கியிருக்கின்றன.

இதில் வரிசை வழங்குதல், மாம்பழ ஜாலம் சமுத்திர ஜாலம், சங்கிலி ஜாலம், அக்கினி ஜாலம், வாத்திய ஜாலம், எலுமிச்சை வித்தை செப்பிடு வித்தை, பிசாசுஜாலம், ரூபாயை அழைக்கும் வித்தை, வாயில் நூலிழுக்கும் வித்தை, சைனதேச வித்தைகள், தேவாலயம் காட்டும் வித்தை, பல வாத்தியங்கள் கேட்கும் வித்தை, தீபத்தைத் தலைகீழாகக் காட்டுதல், கண்ணில் நூலிழுக்கும் வித்தை, அந்தரத்தில் குத்தும் வித்தை, அந்தரத்தில் நிற்கும் வித்தை. முட்டை விளையாடு கிறவித்தை, கோழித்தலை கூவும் வித்தை, மோகினி வித்தைகள் இம் மாதிரியான பல ஜாலங்களடங்கியிருக்கின்றன.

**4 பாகங்கள் விலை ரூபா 3—50**

# அஷ்டாஷ்ட லீலையென்னும்
# தேவீ பராக்கிரமம்

ஆழ்ந்த விஷயம்! தாழ்ந்த விலை!!

சமஸ்தலோக காரணபூதையாய் ஐம்பெருந்தேவர்க்கு உற்பத்தியை ஸ்தானமாய் பிரமேந்திராதிகட்கு எய்திய இடுக்கணைக்களைந்தும் அவரவர் இஷ்டசித்தியருளும் கருணாநிதியாய் விளங்கும் சர்வலோக மாதாவாகிய பராசக்தியின் லீலாவிபூதிகள் தேவீ பராக்கிரமம் எனப் படும். இந்நூலைத் தெள்ளிய தமிழ் நடையில் இயற்றி இவ்வற்புதங்களை நேரில் கண்டாற்போல விளங்கத்தக்க அறுபத்துநான்கு திருவுருவப் படங்கள் அமைத்து முக்கியமான இடங்களில் வேதம்- ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய வடநூல் மேற்கோளும் தமிழ்நூல் மேற்கோளும் காட்டப்பட்டிருக்கின்றன. தேவியின் பிரபாவத்தை உணரும் வண்ணம் ஒவ்வொரு விஷயங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கிக் காட்டியிருக்கிறபடியால் இதை வாசிப்பவர் லோக மாதாவாகிய தேவியின் பிரபாவங்களெல்லாவற்றையும் அறிந்தவராவார் என்பது திண்ணம்.

அறுபத்துநான்கு அழகிய படங்களுடன் நல்லகிளேஸ் கடிதத்திற் பதிப்பித்து நேர்த்தியான கலிகோ பைண்ட் செய்யப்பெற்றது.

**விலை ரூபா 3—50**

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

என்ன? அது தான்

மாந்திரீக நிபுணர்களுக்கு நல்விருந்து

இன்றே! ஆர்டர் செய்யுங்கள்

குறைந்த விலை! நிறைந்த முறைகள்!

# மலையாள மாந்திரீக

# வராகிமாலை

மாந்திரீகம் கற்றுக்கொள்ளும் நண்பர்களே இதில் கணபதி மூலமந்திரம் கணபதிபூஜை, உடல்கட்டு, சுப்ரமணியர் பூஜை, உச்சாடனம் சமுதாயமாரல், அனுமார்பூஜை, அனுமார் வசியம், சுளுக்கு மந்திரிக்க, தேள்விஷ மிறங்க பாம்புகடிக்கு விஷமிறங்க, குழந்தைகளுக்கு உண்டான குரிதோஷம், ஜலம் மந்திரிக்க, சத்தி பூஜை, வாலை வசியம் வாலை சடாக்ஷரம், மனோன்மணி பூஜை, ஏவலை திருப்ப, பிசாசுகளை விலக்க, வைப்புகளை திருப்ப, பேய்பந்தனம் செய்ய, பயம் தெளிய விபூதி பிடிக்க, மோகினிவசியம், அஷ்டலட்சுமி வசியம், காட்டேரி வசியம், சகலகழிப்புகழிக்க, மதுரைவீரன் பூஜை, மயான ருத்திரன் பூஜை, காளி வசியம், பத்திரகாளி வசியம், முத்துமாரியம்மன்பூஜை வயிரவர்வசியம், ஜண்டிவசியம், திருநாகேஸ்வரிவசியம், நவகிரகங்கள்வசியம் கட்டருக்கமந்திரம் வியாபாரத்திற்கு வசியம், இன்னும் இவைபோன்ற அநேக விதமான சங்கதிகள் அடங்கியுள்ளன இதில் சக்கரங்களும் அவைகளுக்குறிய மந்தரங்களும் செய்ய வேண்டிய கிரமங்களும் பூஜைக்குண்டான சாமான்களும், விபரமாக எழுதியுள்ளது யாவரும் அதிவிரைவில் கற்றுக்கொள்ளலாம்

விலை ரூபா 1—4—0

# அனுபோக ஜாதக ரகசியம்.

முதல் பக்கம் கிரகசார சக்கரத்துடனும் இந்த ஜாதக ரகசியத்தை ஜோசியர்களும் சாதாரண மானவர்களும் சுலபமாக தெரிந்து கொள்ளுதற்காக, ஜாதகம் கணிக்கவும், ராசி கணிக்கவும், அஷ்ட வர்க்கம் கணிக்கவும், கோசாரம் பன்னிரு பலாபலன்களும் திசாபுத்தி அந்தர பலன்களும் கண்ணுடிபோல் விளக்கி எழுதி இருக்கிறது, இந்த ஒரு புத்தகமே ஜோதிடத்திற்குப் போதுமானது,

விலை ரூபா 2—50

# இரண வைத்தியம்.

இந்நூல் அநேக வருஷங்களாக ஏட்டுப்பிரதிகளில் மறைவாக இருந்து இப்போதுதான் நம்மவர்களின் நன்மைக்காக அச்சிடப்பட்டுள்ளது. இந்த அருமையான இரணவைத்திய சாஸ்திரம் படிப்போருக்கு நன்கு புலனாகும்படி எளிய நடையில் தெளிவாக வரையப்பட்டுள்ளது. வெட்டுக்காயம், குத்துக்காயம், கண்டமாலை, பவுத்திர மூலம், கன்னப்புற்று முதலிய புற்றுரோகங்கள், அரையாப்புமுதலிய ஸ்திரீ ரோகங்கள், ஆறாத புண்கள், புரையோடும் இரணங்கள், சரப்பான், சொரி, சிரங்கு முதலிய சகல இரணங்களையும் இவைகளை இப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளன. வைத்தியர் உதவியின்றி இதை படிப்போரே சிகிச்சை செய்துகொள்ளலாம். மேற்குறித்த ரணங்களை ஆற்ற வல்ல பிளாஸ்திரி, களிப்பு, விண்டு, லோஷன், பற்றுகள் முதலியவற்றை இலகுவாய் அனைவரும் செய்து கொள்ளலாம். ஆஸ்பத்திரிகளுக்குச்சென்று இரண்டுமாத காலத்தில் ஆற்றிக்கொள்ளக்கூடிய இரணங்களை இப்புத்தக சிகிச்சைப் பிரயோகத்தினால் 10 தினங்களில் ஆற்றிக்கொள்ளலாகும். இதில் எவ்வித ரணங்களையும் கத்தியின்றி சிகிச்சை செய்யும் அரிய முறைகள் உண்டு. இப்புத்தகம் வைத்திருப்பவர்கள் இரண வைத்தியத்திற்காக வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியதில்லை. விலை ரூபா 1—4—0

அதிவிநோத விசித்திர

# விடுகவி களஞ்சியம்

இதில் 234 விடுகவிகள் அடங்கி இருக்கின்றன.
விலை அணா 0—8—0

## ஸ்ரீ பகவத் கீதை விரிவான வசனம்

இதில் பகவத்கீதா மான்மியமும், ஸ்ரீ சங்கர ராமானுஜ மாத்துவபாஷ்யங்களின் குறிப்புகள் முதலியன அடங்கியுள்ளன பாமரர்கள் உய்யும் வண்ணம் ஸ்ரீ பகவான் கிருஷ்ணாவதாரஞ் செய்து அர்ஜுனனுக்குப் போதித்த சிறந்த ஞானநூல் இதற்கு பாஷ்யக்காரர்கள் செய்த வியாக்கியானங்களை எளிய தமிழ் வசன நடையில் எல்லோருக்கும் புரியும்படி விளக்கப்பட்டிருக்கிறது விலை ரூபா 4

**உங்கள் வாழ் நாட்களில் வேலையில்லை என்று**
மனதில் கவலை வேண்டாம்
**மாதம் 100-ரூபா முதல் 500 ரூபாய் வரையில்**
சம்பாதிக்கக்கூடிய அரிய போதனைகளடங்கிய
சுதேசீ

# கைத்தொழில்முறை

இதில் பலவிதமான சோப்புகள், மெழுகுவத்திகள், வச்சிரங்கள் சாக்குகள், பாணவேடிக்கை மருந்துகள், வார்னிஷ்கள், தீக்குச்சிகள் இங்கிகள், சாயங்கள், வெள்ளி, தங்கம், பொன், இவைகளுக்கு கில்டுபோடுதல், மாஜிக் இங்கு, வாணதினுசிகள், பெப்பரமெண்டுதினுசுகள், ஓமம்வாட்டர் பலவித பல்பொடி, கூந்தல் தைலங்கள், அத்தர், செண்டு தினுசுகள், ஊதுவத்திகள், பலவிதகரை எடுக்கும் முறை சேவிங்சோப்பு, இன்னும் வாசனைசோப்பு செய்யு முறை, நறைமயிர் கருக்கும் தைலம் செய்யுமுறை, மூக்குதூள் செய்யும் முறை, சர்பத்துகள் செய்யும் முறை, டபாஸ்கள், மத்தாபுகள், சுருசுரு வத்திகள் முகவசிகர பவுடர் செய்யும் முறை, இதைப்போல் அநேக செய்முறைகள் பிரபல அனுபவசாலிகளால் எழுதப்பட்டிருக்கின்றன.

சுமார் 500 முறைகளுக்குமேல் இந் நூலில் அடங்கி இருக்கின்றன

**இதன் விலை ரூபா 1-8-0**

## மஹேந்திரநாத் மாயாஜால விநோதம்

இதில் வரிசை வழங்குதல் மாம்பழ ஜாலம், சமுத்திர ஜாலம், சங்கிலிஜாலம், அக்கினி ஜாலம், வாத்திய ஜாலம், எலிமிச்சைவித்தை செப்பிடுவித்தை, பிசாசு ஜாலம், ரூபாயை அழைக்கும் வித்தை வாயில் நூலிழுக்கும் வித்தை சைஞதேச வித்தைகள், தேவாலயங்கள் காட்டும் வித்தை, பல வாத்தியங்கள் கேட்கும் வித்தை, தீபத்தைத் தலைகீழாக காட்டுதல், கண்ணில் நூலிழுக்கும் வித்தை அந்தரத்தில் குத்தும் வித்தை, அந்தரத்தில் நிற்கும் வித்தை முட்டை விளையாடுகிறவித்தை, கோழித்தலை கூவும் வித்தை, மோகினி வித்தைகள் இம்மாதிரியான பல ஜாலங்களடங்கி யிருக்கின்றன

விலை அணா 8

Saraswathee Book Depot 175 Sea Street COLOMBO 11

## பார்வதி பரிணிய மென்னும்

# விஷ வைத்திய சிந்தாமணி

இந்நூலில் எத்தகைய கொடிய விஷஜந்துக்களின் கடிகளுக்கும் தகுதியான கைகண்ட முறைகள் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வரிய புத்தகம் ஒன்றிருக்குமானால் பாம்பு முதலிய விஷஜந்துக்களைப் பற்றிய பயமே இல்லாமல் போகும். அஷ்ட நாகங்கள் வசிக்குமிடம். பரிமள குறி, படத்தின்குறி, ஆடுங்குறி, விஷத்தின் அளவு சாத்தியா சாத்தியம், எலி, பெருச்சாளி, பல்லி, அரணை, பணை நாய், வண்டு, முதலியவற்றின் விஷங்கட்கு அவுடதம், கலிங்கம், மூலிகைப் பிரயோகம், புகை, முடிகயிறு மந்திரம் முதலிய சகல சிகிச்சைகளும் அடங்கியது.

இதன் விலை ரூபா 1—50

## மலையாள அனுபோக

# மாந்திரீக ஆசிரியன் மூலமந்திர யந்திரத்துடன்

இதில் விநாயகர் வசியம், சுப்பிரமணியர் வசியம், சத்தி வசியம் லோக வசியம். ஜீவ வசியம், வியாபார வசியம், வழக்கு வெல்லும் வசியம், ஸ்திரீ வசியம், மோகன, ஸ்தம்பனம், ஆகர்ஷணம், உச்சாடனம் வித்துவேஷணம், மாரணம் முதலிய அஷ்டகன்மம். வராகி சத்திகாளி மாடன், மோஹினி, வீரன், குறளி முதலிய சில்லரைத் தெய்வ வசியங்களும், பஞ்சபக்ஷி மாந்திரீகம், சரவியல் சூக்ஷ்ம மனோவசிய சர்வ சக்திபூஜை ஆனந்த தரிசன மாந்திரீகத் திறவுகோல் முதலிய அனேக ரகசியமான கணக்கில்லாத அனுபோகமான மாந்திரீகங்களும் அதற்குரிய கோச பீஜ மந்திரங்களும் மூலமந்திரங்களும் பூஜாவிதிகளும் தெளிவாய் விளக்கிக்காட்டியிருக்கிறது, இதனை ஒரு முறை வாசித்தவர்கள் உபாத்தியாயரில்லாமலும் பிறர் உதவியில்லாமலும் சகல மாந்திரீக வல்லவர்களாயும் எட்டுச் சித்தும் விளையாடும் கலியுக சித்தர்களுமாவார்கள்.

விலை ரூபா 1,

# சோதிட பிரஞ்ஞான தீபிகை.

இந்நூலானது லக்னமுதல் 12 பாவங்களுமுள்ள பலன்களைச் சோதிஷம் அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் எளிதில் விளக்கிக் காட்டக்கூடிய ஒரு வசன நூலாக இருக்கிறது. இந்நூல் ஒவ்வொரு மனிதரிடத்திலுமிருந்தால் அவரவர் வாழ்வு நாட்களில் வரும் நன்மை தீமைகளைச் சுலபமாய்ச் சோதிடர்கள் உதவியில்லாமலே அறிந்து கொள்ளலாம்.

விலை ரூபா 4

## பச்சிலை மூலிகை அகராதி

இப்புஸ்தகம் வைத்தியர்களுக்கும் ஜாலம் செய்பவர்களுக்கும் மாந்திரீகம் செய்பவர்களுக்கும் மிக உபயோகமுள்ளது. ரிஷிகள் முனிவர்கள் சித்தர்கள் தவசிகள் முதலியோர் பச்சிலை மூலிகைகளின் பெயர்களை மர்மமாகவும் இரகசியமாகவும் பரிபாஷையில் பாடியுள்ளார்கள். அவைகளைத் தெளிவாகவும் அம்மர்மங்களை விளக்கமாகவும் இதில் எழுதியுள்ளது. ஒவ்வொருவருக்கும் உபயோக முள்ளது. **விலை ரூபா 1.**

## திருவாசகம்.

### கா. சுப்பிரமணியப்பிள்ளை எம். ஏ. எம். எல்.

(அட்வகேட்) அவர்கள் இயற்றிய உரையுடன்.

திருநெல்வேலி திரு. கா. சுப்பிரமணியபிள்ளை எம். ஏ. எம். எல். (அட்வகேட்) அவர்கள் இயற்றிய இவ்வுரை தமிழறிஞர்கள் யாவரா லும் ஒருங்கே போற்றுந்தகையது எனக் கூறுவது மிகையாகாது. இவ்வுரை ஒன்றே மாணிக்கவாசக சுவாமிகளின் கருத்திற்கமைய எழுதப்பட்டதென்பது இந்நூலை வாசிப்போர் நன்குணர்வார்கள்.

**விலை ரூபா 5—00**

ஒவ்வொருவருக்கும் அவசியமான அரிய நூல்

## நான்கு பாஷை ஒக்கபிலேரி

### தமிழ்-சிங்களம்-இங்கிலீஷ்-ஹிந்துஸ்தான்

ஆகிய நான்கு பாஷைகள் அடங்கியது.

தமிழ் மூலமாக சிங்களம், இங்கிலீஷ், ஹிந்தி ஆகிய பாஷைகளை சப்த தோஷமின்றியும், பிறர் உதவியின்றியும் தானே கற்றுக்கொள்ளத் தக்க முறையில் தொகுக்கப்பெற்ற ஓர் அரிய நூல்.

சொற்ப பிரதிகளே இருப்பதால் இல்லையே என்று ஏமாறாமல் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள். **விலை சதம் 50**

## ஸ்ரீ கணேச ஆரூட தீபிகை விலை ரூ 1—8—0

[கணேச ஆரூட பெரிய சக்கர படத்துடன்]

இக்கிரந்தம் கையொப்பமாயிருக்கில் தாங்களே கைக் கண்ணாடி போல் கருத்தைத் தெரிந்து அவரவர்களுடைய அதிஷ்ட பலாபலன்களை செவ்வையாய் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஆரூட சம்பந்தமாக ஸ்ரீ கணேசர் ஔவைக்கு அருளிச்செய்த இந்த கிரந்தம் ஏட்டுப் பிரதியிலிருந்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது,

Saraswathee Book Depot 175 Sea Street COLOMBO 13

## மாதம் ரூ. 50முதல் 500வரை சம்பாதிக்கத்தக்க ஜீவன உற்பத்தி என்னும்

# கைத்தொழில் வணிக சாஸ்திரம்.

இந்நூலில் அடங்கிய விஷயங்களில் அநேகவித தட்டுமுட்டு மசாமான்கள் கூந்தல் தைலங்கள் வாசனை வஸ்துக்கள் சோப்பு முறைகள், அத்தர், புனுகு, சாம்பிருணி முறைகள், பன்னீர், குங்குமப்பூ, பச்சை கற்பூரம், மெழுகு வத்திகள், ஷர்ப்பத்து, பிஸ்கத், ரொட்டி, கேக் முறைகள், ரப்பர் முத்திரை இங்கு மைகள், முக வசீகர பவுடர் மருந்துதினுசுகள். பஸ்பம் தைலமுறைகள், லேகியம் எண்ணை சூர்ணமுறை, நளபாக முறை, அச்சுவேலைகள் அடங்கியது.

விலை ரூபா 1—50

சுக்ர் பெருநாடி என்னும்

## திசா, புத்தி, அந்தர பலன் — விலை ரூ 1-8-0

ஒவ்வொரு கிரகங்களின் தன்மைகளோடு, அவரவர்களின் திசா புத்தி, அந்தரங்களில் எந்தெந்த நிலைமையில் எந்தெந்தப் பலனைத்தருவார்களென்பதை மிகத்தெளிவாக விளக்கப்பட்டிருககிறது.

சுகர்நாடி என்னும்

## ஜோதிட சிகாமணி — விலை ரூ 8-0-0

திரிசிரபுரம், பீமாநகரம், சோதிட சித்தாந்தி ஸ்ரீ கா. இராமசாமிப்பிள்ளை இயற்றிய பிரபல ஜோதிட நூல். 1500 இராசிச் சக்கரங்கள் அடங்கியது 840 பக்கங்கள் கொண்டது.

இந்நூலில் ஒவ்வொரு ஜாதகனுக்கும் இராசி சக்கிரங்களும் அதற்கு பாடல்களும் உரையுடன் எழுதப்பெற்றிருக்கின்றன, சுமார் 1500-சக்கரங்களும், அதற்கு பலனும் கூறப்பட்டிருக்கிறது. ஜோதிட சம்பந்தமான விஷயங்களனைத்தும் இந்த ஒரு நூலிலேயே அடங்கியிருக்கின்றன. பிறர் உதவியின்றி தங்களுக்குத் தாங்களே சுலபமாக தெரிந்துகொள்ளும் பொருட்டு விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது, நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு உயர்ந்த காலிகோ பைண்டு செய்துள்ளது,

பார்த்தீர்களா? இல்லையேல் இன்றே ஆர்டர் செய்யுங்கள்
குறைந்த விலை! நிறைந்த முறைகள்!!

# பாக்கெட் டாக்டர்

*நூற்றுக்கணக்கான நவீன கைமுறைகள் கொண்ட*
*இப்புத்தகத்தை இன்றே வாங்கிப்பாருங்கள்*

உலகிற் பிறந்தமக்கள் ஒவ்வொருவரும் நோயற்றவர்களாய் சரீரத்துடன் வாழவேண்டுமென்ற எண்ணத்துடன் நம் முன்னோர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சாஸ்திரங்கள் அனந்தமாகும் அவற்றையெல்லாம் ஒருவர் தன் வாழ்நாளில் வாசித்துணர்வதெனின் இயலாததன்றோ? ஆகவே அக்குறையை அகற்றவேண்டி பல வைத்திய சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்தும் பல ஓலைசுவடியிலிருந்து ஆராய்ந்தும் தொகுத்து வெளிவந்துள்ள **பாக்கெட்டாக்டர்** என்னும் புதிய நூலை வாசித்துணர்வோர் தங்கள் சரீரத்தை பாதுகார்த்துக் கொள்வதோடு பிறர்க்கும் பயன்படத்தக்க சிகிச்சைகளை செய்யலாம் இப்புத்தகத்தில் சுமார் **200** முறைகள் அடங்கி இருக்கின்றன மனிதர்களுக்கு உண்டாகும் சகலவிதமான நோய்களுக்கும் ஸ்ரீகளுக்கு உண்டான சகலவிதமான நோய்களுக்கும் குழநதைகளுக்குண்டான நோய்களுக்கும் தாமாகவே இப்புத்தகத்தில்கூறப்பட்டிருக்கும் முறைபடி செய்யலாம் மருந்துசெய்யும்வகை பத்தியம் இன்னின்னநோய் தீருமென்று விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது யாவரும் எளிதில் செய்யகூடியவகையில் எழுதப்பட்டிருக்கிறது இதில் சகலவிதமான நோய்களுக்கு மருந்து சாப்பிடும்படியான வழிகளும் கூறப்பட்டிருக்கிறது நேயர்களே இப்புத்தகம் ஒவ்வொரு குடும்பத்தில் இருக்குமானால் தக்கசமயத்தில் வைத்தியரைப்போல் உதவி புரிந்து உங்கள் குழந்தைகளையும் குடும்பத்தையும் காப்பாற்றும். **விலை ரூ 1—0—0**

*8 பாகங்கள் அடங்கிய*

**மலையாள மாந்திரீக ரத்னகரம் விலை ரூ 2-8-0**

*(அநேக பீஜாக்ஷர யந்திரங்கள் அடங்கியது)*

மனிதர், பேய் பிசாசுகளால் வருந்துன்பங்களினின்று நீங்கி பகைவர் செய்யும் பில்லி சூனியம் மாரணம் முதலியவை தங்களிடம் ஏருதபடி செய்தும், நோய்கொடிகள் அணுகாமல் தடுத்தும், தேவதைகளையும் மனிதர்களையும் வசப்படுத்தியும். எவ்விடத்தும், எக்காரி

யத்திலும் ஜெயம் பெற்றும், மிகுந்த ஐசுவரத்தையும் செல்வாக்கை யும் அடைந்தும் வாழ்வதற்கே பிரியப்படுவார்கள், இவற்றை எல்லாம் எளிதில் அடையக்கூடிய மந்திரயந்திரங்களும், அவற்றை அனுஷ்டித் துச் சித்தி பெறக்கூடிய மார்க்கங்களும் இதில் விளக்கமாகக் கூறப் பட்டிருக்கின்றன.

## மூலமந்திர யந்திரங்கள் அடங்கிய
# மலையாள பகவதி மாந்தீரீக சித்தன்
[யோக சித்தாந்த மகான் சுவாமி வடிவேல் எழுதியது]

இதில் விநாயகர் லக்ஷிமி இராஜராஜேஸ்வரி முதலிய பதினொரு தேவதா வசியங்களும், அதற்குத்தக்க பதினொரு மந்திர யந்திரங்களும் எட்டுவித பஞ்சாக்ஷர அஷ்டமாசித்தின் மந்திரயந்திரங்களும், ஆறு வித சடாக்ஷர அஷ்டகன்ம மந்திரயந்திரங்களும் பத்துவித முனிபேய் பிசாசுதோஷம்நோய்தீர்க்கும்மந்திரயந்திரங்களும்மெஸ்மெரிஸமென் னும் மனோவசியத்தால் நடத்தும் தாரணை, தூங்கவைத்தல், களவுதெரி தல், நோய் தீர்த்தல், இஷ்டார்த்த சித்திவசியம்முதலிய நான்கு உச் சாடன விளக்கப் படங்களும், இன்னும் வர்த்தக உத்தியோக வழக்கு சத்துரு வசியங்களும், தனது சொந்த அனுபவமாக கையாண்டு வரு வதையே உலக பரோபகாரமாக வெளியிட்டிருக்கிறது. இந்நூலைக் கையாளும் எந்த ஒருவரையும் கலியுக சித்தனென்றே வர்ணிக்கப்படு வார்கள். மாந்திரீக சித்தனென்றால் மற்றும் சொல்லவேண்டுமா?

**இதன் விலை ரூபா 1-0-0**

# கனவின்பலாபலன் விளக்கசாஸ்திரம்
## (சோதிட வித்வான் டி. சி. பா. சாரதி எழுதியது)

இந்நூலில் ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி இவ்வைந்துவினு லாய கனவின் பலாபலன்களும், மக்கட்பிரிவு, நான்கு வருணத்தோர் அங்கபின்னர் இவர்களைக் காணும் கனவின் பலாபலன்களும், மக் கட்பொதுகனவின் பலனும் மிருகம், நீர்ஜந்துக்கள், அண்டஜங்கள், பறவைக்கணங்கள், பல விருக்ஷங்களின் கனவின் பலாபலன்களும், புசிக்கும் பண்டம் சிற்றுண்டி அன்னம் பால் பழம் கறிகாய் கிழங்கு நவதானியம் புளி வெல்லம் உப்பு மிளகாய் புஷ்பங்கள் தாம்பூலாதி கள் முதலிய கனவின் பலாபலன்களும், பொன் வெள்ளி முத்து மாணிக்கவகைகளின் கனவின் பலன்களும், பொதுவக கைடிகாரம்

மணி சங்கீதவகை கலவின் பலா பலன்களும் மிகத்தெளிவாய் விளக்கிக்காட்டி, அவரவர்கள் அதனாலடையும் நன்மை தீமைகளை அறிந்துக்கொள்ளும்படியாய் எளியமுறையில் அச்சிடப்பட்டு இருக்கிறது

இதன் விலை ரூபா 1

## அனுபோக ஆரூட சிந்தாமணி,

### (செஞ்சி ஏகாம்பர முதலியார் எழுதியது)

இதில் 27 நட்சத்திரங்களின் ஆரூடமும், உத்தம மத்திபம் அறியும் ஆரூடமும், இராசி கிரகங்களின ஐந்துவிதவிசேஷங்களும். ஆரூடம் கேட்பது இன்னருக்கென்றும், ஆரூடப்பொதுவிதியும், நஷ்டமான பொருள் கிடைக்கும் கிடைக்காது என்பதும், நாற்கால்ஜீவன்கள், உலோ வகைகள் களவுபோன பொருள் இருக்கும் திசை தொகை நிறம் முதலியவைகளும், அவற்றைக் களவாடியவர் ஆண்பால் பெண்பாலென்றும், பிணிவரில் தீரும் தீராதென்பதும், சாப்பிட்டபதார்த்தவகைகள், சுவைகள் அன்னம் கறிவகை முதலியவைகள் கண்டுசொல்லும் ஆரூடங்களும். பெண்கள் ருது ஆரூடமும் கிரகங்கள் இராசிகளின் ஆரூடமும, உயிரெழுத்து ஆரூடமும விளக்கிக்காட்டியிருப்பதால் இந்நூல பொதுமக்களுக்கு நன்மையையளிக்கக்கூடியதாகும். தவிர இதனால் ஒவ்வொருவருடைய மர்மவிஷயங்களை வெளிப்படுத்தக்கூடிய ஆச்சரியம் வாய்ந்த ஆரூடமாகும்.

இதன் விலை ரூபா 1—4—0

இரேகைகளின் படங்கள் அடங்கிய

## விஞ்ஞான தத்துவ ஹஸ்தரேகை சாஸ்திரம்

### [சுவாமி வடிவேல் எழுதியது]

நீங்கள் அநேகமாக ஹஸ்தரேகைப் புத்தகங்களைப் பார்த்தும் படித்துமிருக்கலாம், ஆனல் புத்தகங்களிலுள்ள ரேகைகள் உங்கள் கைகளில் இருக்காது. உங்கள் கைகளில் உள்ளரேகைகள் புத்தகங்களிலிருக்காது இது அநேகருக்கு தெரிந்திருக்கலாம். இந்தரேகை சாஸ்திரத்தில் பெரும்பாலும் நமது கைகளிலுள்ள ரேகைகளையே அனுபவசித்தாந்தமாக விளக்கிக்காட்டிப் பலாபலன் சொல்லுகிறது. நமது ஆயுள் அதிர்ஷ்டம், ஐஸ்வரியம் அறிவு, ஞானம், தாரம், சந்தானம், முதலியவைகளையும், நமது வாழ்க்கையில இடையிடையே நிகழும் சுக துக்காதி கஷ்ட நஷ்டங்களையும், எந்தவயதில் நடப்பது என்பதையும், அநேக படங்களின் மூலம் விளக்கிக்காட்டிப் பலாபலன் எழுதியிருப்பதோடு, கைகளின் விரல்களிலுள்ள பதினன்கு அங்குலாஸ்திகளில் காணப்படும் நானுவித நன்மை தீமை ரேகைகளையும் இருபது படங்களால் விளக்கிக்காட்டிப் பலாபலன் எழுதியி

ருக்கிறது இதனால் சென்றகாலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர் காலத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலும், கண்ணாடியில் தங்கள் முகத்தை தாங்களே பார்ப்பதுபோலும் சுலபமாகத் தெரிந்துக் கொள்ளலாம். இதன் விலை ரூபா 1.

## ருதுநூல் சாஸ்திரம்

[கா. தெய்வசிகாமணி சோதிடர் எழுதியது]

இதில் ருது உற்பத்தியும், கால அமைப்பும், அடையாளங்களும் 12-பாவவிசேஷத்தால் தன் வாழ்க்கைவிஷயம், புத்திரவிஷயம், பர்த்தாவிஷயம், பொருள் விஷயங்களும், மாதபலன்-நக்ஷத்திரபலன்-திதிபலன் வாரபலன்-இலக்கினபலன் என்னும் முக்கிய விசேஷங்களும், குணுதிசயமும், சுமங்கலி அமங்கலி என்னும் இரகசிய விசேஷங்களும், ருதுதோஷ பரிகாரங்களும், அவற்றிற்குறிய சக்கரங்களும் விவரித்து விரிவாயெழுதி அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1-4-0

## மாட்டு வாகடம்

உலகத்தில் மனிதர்கள் சுகஜீவிகளாய் வாழ்வதற்காக மாடுகளையும் பசுக்களையும் கடவுள் சிருஷ்டித்துள்ளார், மாடுகள் பசுக்கள் இவைகளின் குணுகுணம், பாதுகாக்கத்தக்க முறை, வியாதிவந்தால் அவற்றிற்கு செய்யவேண்டிய சிகிச்சைமுதலிய பலவற்றையும் உணருமாறு காலி பரிபாலன் சிகிச்சா தீபம், என்கிற மாட்டுவாகடம் என்னும் இந்நூல் யந்திரங்களுடன் அச்சிட்டு தயாராகியிருக்கிறது. மாடுகளை பற்றிய சாஸ்திரம் இந்துக்களுக்கிருந்தும் அப்பியசிக்கப்படாமலிருப்பதால், இக்குறையை நிவர்த்திக்குமாறு சர்வஜனங்களும் எளிதில் வாசித்து உய்யும்பொருட்டு திருநெல்வேலி நா. நெல்லையப்பபிள்ளை அவர்களால் இயற்றியதுடன், மதுரை த. குப்புசாமி நாயுடு அவர்களால் பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும்பொருட்டு பிழையறச் சீர்திருத்தி சுத்தமாக அச்சிட்டு இருக்கிறது. ஆகையால் ஒவ்வொருவரும் 'மலர்மகள்பதிப்பா' என்று பார்த்து வாங்கக்கோருகிறேன்.

மாட்டு வாகடம் விலை ரூபா 2—8—0.
அசுவசாஸ்திரம் விலை ரூபா 2—8—0
ஷை இரண்டும் சேர்ந்து கலிகோ பயிண்டு 5—0—0

## கண்ணுசாமி பாக்கெட் வைத்தியம்.

"பாக்கெட் வைத்தியம்" என்பதற்குப்பொருள் வைத்தியர்கள் தேசசஞ்சாரகாலத்தில் பெருநூல்களையெல்லாம் தம்முடன் எடுத்துச் செல்லுவது கஷ்ட சாத்தியமாகும். அத்தகையோர் சட்டைப் பையில் அடக்கமாகக் கூடிய சிறு நூலாகவும் வேண்டிய விஷயங்களுக்கெல்லாம் ஒருவழி காட்டியாகவும் இருக்க வேண்டும் என்ற

கருத்தை முன்னிட்டு வைத்திய வித்வான் மணி. C. கண்ணுசாமி பிள்ளை அவர்களைக் கொண்டு இந்நூல் எழுதப்பட்டது.

இந்நூலில் குறிப்பிட்டுள்ள நாடி, நிதானம், அஷ்டவிதப் பரிசை, சரக்குசுத்தி, கியாழம், சூரணம், மாத்திரை, லேகியம், கிருதம் மெழுகு, தைலம் பற்பம், செந்தூரம் யாவும் அனுபவத்தில் அடிக்கடி உபயோகப் படுத்தப்பட்டவைகளாகும். இதுவுமன்றிப் பலவிதமான அனுபவ சிகிச்சைகளை எச்ச இலம்பகத்தில் கூறப்பட்டு உள்ளன. ஆகவே இந்நூல் எல்லா வைத்தியர்களுக்கும் இனிதுபயன் படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகையால் ஒவ்வொருவரும் மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிப்படுத்திய பெருமுறைபாக் கெட் வைத்தியம் என்னும் புஸ்தகத்தைப்பார்த்து வாங்கும்படியாய் கோருகின்றேன். **விலை ரூபாய் 2**

## பட்டினத்தடிகள் திருப்பாடற்றிரட்டு பத்திரகிரியார் திருப்புலம்பல்.

### (விருத்தியுரையுடன்)

எல்லா நிலைகளிலும் உயர்ந்தநிலை துறவறநிலையென்று நம்முன்னோர் அறிவுறுத்தியிருப்பது எவரும் அறிந்ததொன்றே. அத்தகை நிலைக்குச் சிறந்த இலக்கியமாக விளங்குபவர் பட்டினத்தடிகள் என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. பட்டினத்தடிகள் துறவு நிலையைத் தாயுமானருள்ளிட்ட பல சான்றோர் போற்றியிருக்கின்றனர். துறந்தவருள் தலைசிறந்து விளங்கும் பட்டினத்தடிகள் திருவாய்மலர்ந்தருளிய பாடல்களின் மாண்பை அறியாதாரில்லை அப்பாடல்களை ஓதுவோர் உலகப்பற்றில் வெறுப்பும், கடவுள் பற்றில் விருப்பங்கொள்வர் என்பது உறுதி, அத்துணைச் சிறப்பு வாய்ந்த அவர் திருப்பாடல்களை ஓதி உய்யவேண்டுவது ஒவ்வோர் அறிஞர்கடனும்.

பட்டினத்தார் திருப்பாடல்களைப் பொருளுணராது ஓதுவதனல் பெரும்பயன் விளைதல் அரிது. அக்காரணம்பற்றிக்கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படவேண்டிப் பட்டினத்தார் திருப்பாடற்றிரட்டுக்கும், பத்திரகிரியார் திருப்புலம்பலுக்கும், ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைக்கொண்டு எளியநடையில் பல மேற்கோள்களடங்கச் சிறந்த விருத்தியுரை எழுதுவித்து அவை யல்கிய நூலை நாம் வெளியிட்டுள்ளோம்.

அந்நூல் உயர்ந்த காகிதத்தில் பிழையற்ற சுத்தமாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் முதலியார் தமிழ்நாட்டுக்கு நன்குதெரிந்தவராதலால் அவர் எழுதிய உரையைப்பற்றி நாமொன்றும் இங்கே விரித்துக் கூறவேண்டுவதில்லை. புத்தகத்தை வாங்கி வாசித்தால் அதன் நிலையும் தன்மையும் செவ்வனே விளங்கும். பட்டினத்தடிகள் திருவுருவப் படத்துடன் ஆங்காங்கு ஐதீகப்படி அரும்படங்கள் சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்தது.

கிடைக்குமிடம்:— **விலை ரூபாய் 4-0-0**

**சரஸ்வதி புத்தகசாலை**

**175, செட்டியார் தெரு, கொழும்பு.**